வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை - விருதுநகர் மாவட்டம்

காரியாபட்டி வட்டம்

அறிவிக்கை எண்:01/2025

நாள் : 21.07.2025

விளம்பர எண்.01/KPT

# அறிவிக்கை

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டத்தில் 30.09.2022 அன்றைய நிலையில் காலியாக உள்ள 05 (ஐந்து) கிராம உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட உள்ளது. காலிப்பணியிடங்களுக்கும் காரியாபட்டி வட்டத்திற்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 21.07.2025 முதல் 19.08.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கப் பெறும் வகையில் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை **http://Virudhunagar.nic.in** என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு 10-ஆம் வகுப்பு (இடைநிலை இறுதி வகுப்பு சான்றிதழ் (SSLC)) இறுதித் தேர்வு எழுதியிருக்க வேண்டும். மேற்படி காலியிடங்கள் கீழ்காணுமாறு இனச்சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| பிரிவு | பாலினம் | முன்னுரிமை/ முன்னுரிமை அல்லாதது | வயது (அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்று) | காலியிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதவர்) | பெண் | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21<br>உச்ச வரம்பு வயது-37 | 1(ஒன்று) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதவர்) | பொது | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21<br>உச்ச வரம்பு வயது-37 | 1(ஒன்று) |
| பொதுப் பிரிவினர் | பெண் | முன்னுரிமையுடையவர் (ஆதரவற்ற விதவை) | குறைந்தபட்ச வயது -21<br>உச்ச வரம்பு வயது-32 | 1(ஒன்று) |
| ஆதி திராவிடர் | பொது | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21<br>உச்ச வரம்பு வயது-37 | 1(ஒன்று) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் | பொது | முன்னுரிமையற்றவர் | குறைந்தபட்ச வயது -21<br>உச்ச வரம்பு வயது-37 | 1(ஒன்று) |

1) நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 05 (ஐந்து மட்டும்)

2) ஊதிய விபரம்:-

| பதவியின் பெயர் | சம்பள ஏற்றமுறை |
|---|---|
| **கிராம உதவியாளர்** | ரூ.11,100 —— 35,100<br>(சிறப்பு காலமுறை ஊதியம் - ஊதியக் கட்டு எண்.6) |

3) கிராமம் வாரியாக காலிப்பணியிட விபரம்:-

| வரிசை எண் | கிராமத்தின் பெயர் |
|---|---|
| 1. | சிங்கநாதபுரம் |
| 2. | அல்லிக்குளம் (1) |
| 3. | சந்தனேந்தல் |
| 4. | புதுக்குளம் |
| 5. | சின்ன ஆலங்குளம் |

4) வயது வரம்பு:-

| வ.எண். | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (முடிவடைந்து இருக்க வேண்டும்) |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர்(முஸ்லிம் ) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள். | 21வயது | 37 வயது |
| 2. | ஏனையோர் (ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர்(அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர்(முஸ்லிம் ) ஆகிய வகுப்பினை சாராதவர்கள்) | 21வயது | 32 வயது |
| குறிப்பு: அரசாணை (நிலை) எண். 91 மனிதவள மேலாண்மை (S) துறை நாள்:13.09.2021.ன் படி. | | | |

4) வயது வரம்பு சலுகை:

அ)முன்னாள் இராணுவத்தினர்: -

பிற்படுத்தப்பட்ட/ மிகவும் பிற்படுத்தப்பட்ட /சீர்மரபினர் / பட்டியலினத்தவர்/ பழங்குடியினர் வகுப்பினர் ஆகிய பிரிவினைச் சேர்ந்தோருக்கு உச்ச வயது வரம்பு 53, இதர பிரிவினருக்கு வயது வரம்பு 48 வயது.

ஆ)மாற்றுத்திறனாளி:-

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்புக்கு மேல் 10 ஆண்டுகள் வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவர்கள்.

5) கல்வித் தகுதி:-

அ) குறைந்த பட்சம் - இந்த அறிவிப்பு வெளியிடப்படும் நாளன்று குறைந்த பட்சம் 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதி தேர்ச்சி / தோல்வி அடைந்திருக்க வேண்டும்.
ஆ) அதிக பட்சம்:- இதர உயர்கல்வித் தகுதிகள்.

6) உடற் தகுதி:-

விண்ணப்பதாரர்கள் நேர்காணல் அன்று உடற் தகுதி சான்றிதழினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் அடிப்படை விதிகளுள் விதி -10-இன் படி சமர்ப்பித்தல் வேண்டும்.

7) இருப்பிடத் தகுதி:

விண்ணப்பதாரர்கள் காரியாபட்டி வட்டத்தில், நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும் நிரந்தர முகவரிக்கு ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை/ ஆதார் அட்டை/குடும்ப அட்டை/ ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும் மனுதாரரின் நிரந்தர முகவரி தொடர்பாக எழும் தெளிவின்மைகள் குறித்து பணி நியமன அலுவலரின் முடிவே இறுதியானது.

8) இதர தகுதிகள்/ நிபந்தனைகள்:-

அ) விண்ணப்பதாரர் தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

ஆ) அரசாணை(நிலை) எண்.312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1)) துறை நாள்:04.06.2025-இன் தெரிவிக்கப்பட்டுள்ள, திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி உரிய கல்வித் தகுதி, மிதிவண்டி/ இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம், நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண் வழங்கப்பட்டு, ஒட்டு மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில், விண்ணப்பதாரர்களின் தரவரிசைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு, இன சுழற்சி, முன்னுரிமை, வயது வரம்பு சலுகை முதலியவை கருத்தில் கொள்ளப்பட்டு பணி நியமனம் செய்யப்படும்.

இ) பணி நியமனத்தின் போது உடற் தகுதி சான்று அளிக்கப்பட வேண்டும்.

ஈ) தகுதியில்லாத, முறையாக பூர்த்தி செய்யப்படாத, கையொப்பம் இடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உ) குற்றவியல் வழக்குகளில் தொடர்புடையவர்கள் மற்றும் ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வாழ்க்கைத் துணை உடையவர்கள் இப்பணிக்கு தேர்வு செய்ய தகுதியற்றவர்கள் ஆவர்.

9) தேர்வு நடைமுறை:-

| வ. எண். | தேர்வு முறை | வழங்கப்படும் மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | கல்வித் தகுதி(10ம் வகுப்பு தமிழ் ஒரு பாடமாக கொண்டு இறுதி தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும் (குறிப்பு-(SSLC- Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். | 10 |
| 2 | மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன் | 10 |
| 3 | வாசித்தல் மற்றும் எழுதும் திறன் | 30 |
| 4 | வசிப்பிடம்<br>அ) சம்மந்தப்பட்ட கிராமத்தில் வசிப்பவர்களுக்கு - 35<br>ஆ) சம்மந்தப்பட்ட தாலுகா எல்லைக்குள் வசிப்பவ்களுக்கு - 30 | அதிகபட்சம் 35 |
| 5. | நேர்காணல் | 15 |
| | மொத்த மதிப்பெண்கள் | 100 |

<u>குறிப்பு:-</u>

ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரு காலிப் பணியிடத்திற்கு சமமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால் வயது அடிப்படையில் மூத்த விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

19/07/25

வருவாய் வட்டாட்சியர்,
காரியாபட்டி.

21/5/7/25